புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்

38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,

Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.

No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061

Cell: 7810068421,9488420449

neethiPress@ gmail.com

மலர்: 01 • இதழ்: 196 • 21-01-2026 • புதன் • பக்கம்- 4 • விலை- ரூ.5 • திருச்சி

Volume 01 • Issue: 196 • 21-01-2026 • Wednesday • Pages - 4 • Price- Rs. 5 • Trichy


## பாஜக தேசிய தலைவராக நிதின் நபின் தேர்வு: மோடி, ராஜ்நாத் சிங் நேரில் வாழ்த்து



புதுடெல்லி: ஜன.21–

பாஜகதேசிய தலைவராக அக்கட்சியின் தேசிய செயல் தலைவராக இருந்த நிதின் நபின் இன்று முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார். பாஜகவின் அமைப்புத் தேர்தல் அலுவலர் கே. லக்ஷ்மண் இதனை அறிவித்தார்.

பாஜக தேசியத் தலைவர் தேர்தல் செயல்முறை ஜனவரி 16 அன்று அறிவிக்கப்பட்டது. ஜனவரி 19 அன்று வேட்புமனுக்கள் தாக்கல் செய்யலாம் என்றும், ஜனவரி 20 அன்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, கட்சியின் தேசிய தலைவரான ஜே.பி. நட்டா, நிதின் நபினுக்காக நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். அப்போது கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் உடன்இருந்தனர்.வேறுயாரும்வேட்புமனு தாக்கல் செய்யவில்லை.

இதையடுத்து, நிதின் நபின் பாஜகவின் தேசியதலைவராகதேர்ந்தெடுக்கப்பட்டதாக தேர்தல் அலுவலர் கே.லக்ஷ்மண் இன்று முறைப்படி அறிவித்தார். மேலும், அதற்கான சான்றிதழையும் நிதின் நபினிடம் அவர் வழங்கினார். இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா,பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்ட கட்சியின் முன்னணி நிர்வாகிகள் பெருமளவில் கட்சித் தலைமையகத்தில் திரண்டிருந்தனர்.

இதையடுத்துப் பேசிய விடைபெறும் தலைவரான ஜே.பி. நட்டா, "உலகின் மிகப்பெரிய அரசியல் கட்சியான பாஜகவின் தேசியத் தலைவராக இளமையும், துடிப்பும், திறமையும் நிறைந்த நிதின் நபின் பொறுப்பேற்கும் இன்றைய தினம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும். எனது சார்பாகவும், லட்சக்கணக்கான கட்சித் தொண்டர்கள் சார்பாகவும், நான் அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதன்மையாக கட்சித் தொண்டரான நிதின் நபின், முதிர்ந்த சித்தாந்த பின்னணியைக் கொண்டவர். மிக இளம் வயதிலேயே ஐந்து முறை எம்.எல்.ஏ.வாகப் பணியாற்றியுள்ளார். தற்போதும் எம்.எல்.ஏ.வாகப் பணியாற்றி வருகிறார். பிஹார் அரசாங்கத்தில் பல முறை அமைச்சராகப் பணியாற்றியுள்ளார். கட்சியின் இளைஞரணியின் தேசிய பொதுச் செயலாளராக இருந்து, நாடு முழுவதும் பயணம் செய்து முழு நாட்டையும் புரிந்துகொள்ளும் வாய்ப்பை அவர் பெற்றுள்ளார். சிக்கிம் மற்றும் சத்தீஸ்கரின் பொறுப்பாளராக இருந்த அவர், அங்கு பாஜக அரசை கொண்டுவருவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றியுள்ளார்.

கட்சியில் இணைந்து பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்ததற்காகவும், ஒவ்வொரு தருணத்திலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொலைநோக்குப் பார்வையை வழங்கியதற்காகவும், இந்தப் பணியை நிறைவேற்ற உதவியதற்காகவும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். நாட்டின் பிரதமராக மிகவும் பரபரப்பாகவும் இருந்தபோதிலும்,சிறிய விஷயங்களில்கூட கவனம் செலுத்தி கட்சியின் முன்னேற்றத்திற்கு அவர் அளித்த பங்களிப்பிற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்" என தெரிவித்தார்.

பாஜக தேசிய தலைவர் பொறுப்பை ஏற்கும் முன்பாக, டெல்லியில் உள்ள குருத்வாரா ஸ்ரீ பங்களா சாஹிப், ஜான்டேவாலன் தேவி கோயில்,ஹனுமான் கோயில் ஆகியவற்றுக்குச் சென்று நிதின் நபின் வழிபாடு மேற்கொண்டார். கட்சித் தலைவராகபொறுப்பேற்றநிதின் நபினுக்கு தலைவர்கள் பலரும் நேரில் வாழ்த்து தெரிவித்தனர்.

## "ஆளுநர் உரை நடைமுறைக்கு விலக்களிக்க நடவடிக்கை"

### சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை: ஜன.21–

ஆண்டின் தொடக்கத்தில் ஆளுநர் உரை என்ற நடைமுறையை விலக்கிடும் வகையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான முயற்சிகளை இந்தியா முழுவதும் இருக்கும் ஒத்த கருத்துகளைக் கொண்ட அரசியல் கட்சிகள் துணையோடு நாடாளு மன்றத்தில் திமுக முன்னெடுக்கும்" என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக சட்டப் பேரவையில் ஆளுநர் ஆர்.என்.ரவி உரையை வாசிக்காமல் அவையிலிருந்து வெளியேறிய நிலையில், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தீர்மானத்தைக் கொண்டு வந்து ஆற்றிய உரையில், "தமிழக சட்டப் பேரவையில் மீண்டும் ஒரு முறை ஆளுநர் சட்ட விதிகளையும், மரபுகளையும் மீறி செயல்பட்டு அவையிலிருந்து வெளியே சென்றுள்ளார்; வெளியே என்று சொல்வதைவிட, வெளியேறிச் சென்றிருக்கிறார்.

ஆளுநரின் செயல் அவர் வகிக்கக்கூடிய பதவிக்கு அழகல்ல. இந்திய அரசமைப்புச் சட்டம் article 176ன்படி, ஆளுநர் உரை என்பது மாநில அரசால் தயாரிக்கப்பட்டு ஆளுநரால் முழுமையாகப் படிக்கப்படவேண்டிய ஒன்றாகும். இதில் ஆளுநர் தனது சொந்தக் கருத்துக் களைத் தெரிவிப்பதற்கோ, மாநில அரசால் தயாரித்து வழங்கப்பட்ட உரையில் நீக்கம் செய்வதற்கோ அரசமைப்புச் சட்டத்தில் இடமில்லை.

அரசமைப்புச் சட்டத்தில் ஆளுநரின் உரை குறித்து தெரிவிக்கும் கிகூஷீமீ வீநீமீ 176ல், தெளிவுரைகளைக் கேட்பதற்கு வழிவகை செய்யப்படவில்லை. இருப்பினும் நாம் அவர் அவ்வாறு சில விளக்கங்களைக் குறிப்பிட்டு அரசுக்கு நேற்று கடிதம் எழுதியதைத் தொடர்ந்து அவருக்கு அதற்கான பதிலும் அளிக்கப்பட்டது. இந்த நிலையில் ஆளுநர் வேண்டுமென்றே அரசமைப்புச் சட்டத்தை மீறிய ஒரு செயலை செய்துள்ளார்.

ஆளுநரின் செயல் என்பது நூற்றாண்டு கால மரபையும், நீண்ட பாரம்பரியத்தையும் கொண்ட இந்த மக்கள் சபையை, அதன் மாட்சிமையை அவமதிக்கும் செயலாகும் என்றே நான் கருதுகிறேன்.

10/4/2023 அன்று இதே பேரவையில் நான் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இங்கே நான் நினைவுகூர விரும்புகிறேன். "ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு ஆளுநர் பதவியும் தேவையில்லை" என்று அண்ணா கூறியபோதிலும், அதை கருணாநிதி வழிமொழிந்தபோதிலும், அந்தப் பதவி இருக்கும் வரை அதற்குரிய மரியாதையைக் கொடுக்க அவர்கள் முதலமைச்சர்களாக இருந்த நேரத்தில் தவறியதில்லை. அவர்களது வழியைப் பின்பற்றி நானும் அதிலிருந்து இம்மியளவும் விலகியதில்லை; இந்த அரசும் தவறியதில்லை." என்று அன்றைக்கு நான் எடுத்துரைத்தேன்.

அந்தக் கொள்கையையொட்டியே நான் ஆளுநர் உரை நிகழ்த்த வேண்டும் என்று நடவடிக்கை எடுக்க ஆணையிட்டேன்.

எனினும், ஆளுநர் ஏற்கெனவே நடந்து கொண்டது போலவே மீண்டும் இன்று செயல்பட்டிருப் பது மிகவும் வருத்தத்திற்குரியது. தமிழ்நாடு சட்டமன்றம், எட்டரைக் கோடி தமிழ் மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற மாமன்றம். ஆளுநர் என்பவர் மாநில நலனில் அக்கறை கொண்டவராக, மக்கள் மேம்பாட்டில் ஆர்வம் கொண்டவராக, உண்மையைப் பேசுபவராக இருக்க வேண்டும். மக்களுடைய பேராதரவோடு, பெரும்பான்மையோடு வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ள அரசு எடுக்கின்ற முடிவுகளுக்கு ஒத்துழைப்பவராக இருக்க வேண்டும்.

அதைத்தான் அரசமைப்புச் சட்டமும் அந்தப் பதவி வகிப்பவரிடம் இருந்து எதிர்பார்க்கிறது. ஆனால் நம்முடைய ஆளுநர் அவர்கள் அதற்கு மாறாகச் செயல்படுகிறார். மாநில நிர்வாகத்தை முடக்கவும், பொது மேடைகளில் அரசியல் பேசியும் அவதூறு பரப்பி வருகிறார். அது அவரது சொந்த விருப்பம் என்று கருதலாம்.

எனினும், அத்தகைய ஒரு முயற்சியை இங்கும் செய்ய அவர் முனைவது ஏற்புடையதல்ல. நூற்றாண்டு விழா கொண்டாடி, சீரோடும், சிறப்போடும் இயங்குகின்ற இப்பேரவையின் புகழ் மங்கிடாத வகையில் பாதுகாத்து வந்த சான்றோர்களின் வழித்தடத்தினைப் பின்பற்ற வேண்டிய கடமை நமக்கு உள்ளது.

வரலாற்றுப் பெருமை கொண்ட இப்பேரவையின் மாண்பினைப் பாதுகாக்க வேண்டிய முதல் பொறுப்பு எனக்கு உள்ள காரணத்தால், கீழ்க்காணும் தீர்மானத்தை பேரவைத் தலைவரின் இசைவோடு, சட்டமன்றப் பேரவை விதி 17ஐத் தளர்த்தி, முன்மொழிந்திட அனுமதி கோருகிறேன்" என்று கூறினார். இதனை தொடர்ந்து சபாநாயகர் அந்த தீர்மானத்துக்கு அனுமதி வழங்கினார்.

இதனை தொடர்ந்து முதல்வர் முன்மொழிந்த தீர்மானத்தில், "ஏற்கெனவே உள்ள நடைமுறைகளைப் பின்பற்றி, தமிழ்நாடு அரசால் தயாரித்து அனுப்பி வைக்கப்பட்ட ஆளுநர் உரையைப் பேரவையில் படிக்காமல் ஆளுநர் சென்றுள்ளதை இப்பேரவை ஏற்கவில்லை. ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்ட, சட்டமன்ற உறுப்பினர்களின் மேசையில் உள்ள கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆளுநர் உரையின் ஆங்கில மொழியாக்கம் இங்கே ஆளுநரால் படிக்கப் பட்டதாக இப்பேரவைக் கருதுகிறது. அவ்வாறே அவைக் குறிப்பில் நடவடிக்கைக் குறிப்புகள் இடம் பெறலாம்.

மேலும், மரபுவழி நிகழ்வுகள், பேரவைத் தலைவரால் படிக்கப்பெறவுள்ள ஆளுநர் உரையின் தமிழாக்கம் மற்றும் நான் முன்மொழிகின்ற தீர்மானம், அதன் முடிவு ஆகியவை மட்டும் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறலாம் என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். இந்தத் தீர்மானத்தை அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்' என்றார். இதனை தொடர்ந்து அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் பின்னர், தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தந்த உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய உரையில், "ஆண்டுதோறும் அரசின் சார்பில் உரை தயாரித்து அனுப்புவதும், அதனை முறையாக வாசிக்காமல் ஆளுநர் முரண்டு பிடிப்பதும் தொடர்ந்து வருவது நல்லதல்ல.

ஆளுநர்கள் மாநில அரசுகளுக்கு இடைஞ்சலாக இருந்து இப்படி செயல்படுவது இங்கு மட்டுமல்ல, பல்வேறு மாநிலங்களிலும் நடந்து வருகிறது. ஒரு நாள் செய்தியாக இதனை கடந்துவிட முடியாது.

ஆண்டின் தொடக்கத்தில் அரசின் கொள்கை அறிக்கையை ஆளுநர் முறையாக வாசிப்பது நடைமுறை. அந்த நடைமுறையை ஒருவர் தொடர்ந்து மீறும்போது அதுபோன்ற விதிகளை எதற்காக வைத்திருக்க வேண்டுமென்ற கேள்வி சாதாரணமாகவே அனைவரின் மனதிலும் எழும்.

எனவே, ஆண்டின் தொடக்கத்தில் ஆளுநர் உரை என்ற நடைமுறையை விலக்கிடும் வகையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான முயற்சிகளை இந்தியா முழுவதும் இருக்கும் ஒத்த கருத்துகளைக் கொண்ட அரசியல் கட்சிகள் துணையோடு இந்திய நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் முன்னெடுக்கும் என்ற உறுதியையும் இந்த மாமன்றத்தில் அறிவித்து, நன்றி கூறி அமைகிறேன்" என்றார்.

சட்டப்பேரவை உரையைத் தொடர்ந்து, முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், "இந்தியாவில் எதிர்க்கட்சிகள் ஆளும் அனைத்து மாநிலங்களுக்காக, 'ஆளுநர் உரை தேவையில்லை' என அரசியலமைப்புத் திருத்தம் (Constitut ional Amendment) கோருவோம்.

அரசு தயாரித்தளித்த அறிக்கையை ஆளுநர் படிக்காமல் வெளியேறுவதால், திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளைப் பயன்பெறும் மக்களிடம் மறைத்துவிட முடியாது.

அரசியலமைப்புக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும், மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சட்டப் பேரவைக்கும் மதிப்பளிக்காமல் மக்கள்நல நடவடிக்கைகளை முடக்கி வைத்து முரண்டு பிடிக்கும் தமிழ்நாடு ஆளுநரை 'Recal citrant Governor' என "The Hindu" தலையங்கத்தில் நேற்று குறிப்பிட்டிருந்தார்கள். அவரது இன்றைய செயல்பாடும் அதனை மெய்ப்பித்துள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

## திருவள்ளூர் நகரில் உள்ள கோவை பழமுதிர் நிலையம் மற்றும் டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் கெட்டுப்போன பூச்சிகள், வண்டுகள் உள்ள 100 கிலோ மாவு மற்றும் 20 கிலோ பேரிச்சம்பழம் பறிமுதல்

திருவள்ளூர் ஜன 21 :

தமிழகத்தில் கடந்த காலங்களில் தெருக்களில் மளிகை கடை நடத்தி வருவார்கள். அங்குள்ள உணவு அரிசி, சர்க்கரை, கோதுமை, மற்றும் மைதா ரவை கோதுமை மாவு உள்ளிட்ட பொருட்களை கிராம் கணக்கிலும், கிலோ கணக்கிலும் எடை போட்டு வாங்கி செல்வதுண்டு. ஆனால் தற்போது நாகரிக வளர்ச்சியின் காரணமாக உணவுப் பொருட்களையும் பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்வது வாடிக்கையாகிவிட்டது. அந்த பாக்கெட்டுகளில் தயாரித்த தேதி மற்றும் காலாவதியாகும் தேதி ஆகியவற்றை அச்சிட்டு விற்பனை செய்து வருகின்றனர்.

ஆனால் அவசரத்திற்கு வாங்கி செல்பவர்கள் ஒரு சிலர் இதை கவனிக்காமல் வாங்கி செல்லக்கூடிய சூழ்நிலையில் உள்ளது. விற்பனையாளர்களும் காலாவதியாகும் தேதியை பார்க்காமல் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர். இதனால் உணவுப் பொருட்களில் அடிக்கடி புழு, பூச்சி ஆகியவை கிடப்பது உண்டு. அதே போல் திருவள்ளூரில் உள்ள பிரபல டிபார்ட்மெண்டல் ஸ்டோரிலும் இதுபோன்ற நிகழ்வு அரங்கேறி உள்ளது. அதாவது திருவள்ளூர் நகரின் முக்கிய சாலையான சென்னை திருப்பதி நெடுஞ் சாலையில் உள்ளது கோவை பழமுதிர் நிலையம் மற்றும் டிபார்ட்மெண்டல் ஸ்டோர். இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள கடலை மாவு, உளுந்தை மாவு, ரவை, மைதா, கேழ்வரகு, கோதுமை மாவு உள்ளிட்ட மாவுகளை வாடிக்கையாளர்கள் வாங்கி சென்றுள்ளனர்.



ஆனால் இந்த மாவு பாக்கெட்டுகள் கெட்டுப்போய் அவற்றில் பூச்சி இருப்பதாக திருவள்ளூர் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளுக்கு பொதுமக்கள் புகார் அளித்தனர். புகாரின் அடிப்படையில் கோவை பழமுதிர் நிலையத்திற்க்கு வந்த உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மாவு உள்ளிட்ட பொருட்களை சோதனை செய்தனர். அப்போது பேரிச்சம் பழங்களை ஆய்வு செய்தபோது ஃபிரிட்ஜில் வைக்காமல் திறந்த வெளியில் வைத்திருந்ததால் அவை வெள்ளை நிறமாக மாறி இருந்தது. இதனால் அங்கிருந்த சுமார் 20 கிலோ பேரிச்சம்பழமும், கேழ்வரகு மற்றும் கடலை மாவு பூச்சி வண்டு என இருந்ததால் 110 கிலோ அளவுக்கு மாவுப்பொருட்களை பறிமுதல் செய்து அவற்றின் மாதிரிகளை ஆய்வுக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

மேலும் கெட்டுப் போன மாவு வகைகள் மற்றும் பேரிச்சம் பழங்களை பறிமுதல் செய்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆய்வு மேற்கொண்ட ஒரு மணி நேரத்திற்கும் மேலாக கடைகளின் ஷட்டர்கள் மூடப்பட்டு வாடிக்கையாளர்கள் அனுமதிக்காமல் ஆய்வு மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கது. இதுபோன்று திருவள்ளூர் பகுதியில் பல்வேறு வணிக நிறுவனங்கள் மார்க்கெட் உள்ளிட்ட பகுதிகளில் இதுபோன்ற கெட்டுப்போன பூச்சிகள் உள்ள பொருட்களை விற்பனை செய்வதாக உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளுக்கு மக்கள் புகார்கள் அளித்து வருவது குறிப்பிடத்தக்கது. மாதிரிகள் எடுத்துச் சென்றுள்ள நிலையில் மாதிரிகளின் முடிவுகள் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வில்லியனூர் தொகுதியில் ரூபாய் ஒரு கோடி மதிப்பில் வளர்ச்சிப் பணிகள் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார் !







புதுச்சேரி, ஜன.21–

புதுச்சேரி வில்லியனூர் சட்டமன்ற தொகுதியில் பயணியர் நிழற்குடை, சாலை மேம்படுத்துதல், கல்வெட்டு அமைத்தல் உள்ளிட்ட ஒரு கோடி மதிப்பிலான வளர்ச்சிப் பணிகளை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் இன்று பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்ற தொகுதியில், முருங்கப்பாக்கம் முதல் வில்லியனூர் வரை உள்ள சாலையில் பாப்பாஞ்சாவடி, ஒதியம்பட்டு, திருக்காஞ்சி சாலை சந்திப்பில் இருபுறம் என நான்கு இடங்களில் ரூபாய். 22,35,312/ மதிப்பீட்டில் பேருந்து பயணியர் நிழற்குடை, ரூ. 58,01,000/ரூ லட்சம் செலவில் ஒதியம்பட்டு செயிண்ட் ஜோசப் ஆஃப் குளூனி பள்ளிக்குச் செல்லும் தார்ச்சாலையை மேம்படுத்துதல், ரூ. 19,34,000/ லட்சம் செலவில் திருக்காஞ்சி ரூ மணவெளி நான்கு முனை சந்திப்பில் ஆர்சிசி வடிகால் கல்வெட்டு ஆகிய பணிகள் என மொத்தம் ரூபாய் ஒரு கோடி மதிப்பிலான வளர்ச்சிப் பணிகளுக்கான பூமி பூஜை நிகழ்ச்சி இன்று காலை நடந்தது.

புதுச்சேரி அரசின் பொதுப்பணித்துறை தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு, சாலைகள் மற்றும் கட்டிடங்கள் தெற்கு பிரிவு மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை தேசிய நெடுஞ்சாலைக் கோட்ட செயற்பொறியாளர் பன்னீர், சாலைகள் மற்றும் கட்டிடங்கள் தெற்கு பிரிவு செயற் பொறியாளர் சந்திரகுமார், உதவிப் பொறியாளர்கள் சிவப்பிரகாசம், நடராஜன், இளநிலைப் பொறியாளர்கள் மணிவண்ணன், ராஜதினேஷ், குளூனி பள்ளி முதல்வர் எமிலியானா, நிர்வாகிகள் ஜேசிஜான், மேக்லின், டிகேபி கமலக்கண்ணன், பிஆர்டிசி பாஸ்கர் மற்றும் திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, செல்வநாதன், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, வர்த்தகர் அணி அமைப்பாளர் ரமணன், விவசாய அணி அமைப்பாளர் குலசேகரன், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் ஆறுமுகம் என்கிற செல்வநாதன், தொமுச தலைவர் அங்காளன், மதிமுக கபிரியேல், மாநில துணை அமைப்பாளர்கள் சரவணன், ராமதாஸ், காளி, ஆதிதிராவிடர் அணி துணைத் தலைவர் கதிரவன், வர்த்தகர் அணி துணைத் தலைவர் குரு என்கிர சன்முகசுந்தரம், தொகுத துணைச் செயலாளர் அரிகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர் சுப்ரமணி, திருவேங்கடம், கிளைக் கழக நிர்வாகிகள் ராஜி, ஜனா, மிலிட்டரி முருகன், சிமெண்ட் சரவணன், கோடிப் பிரகாசம், கார்த்திகேயன், தட்சிணாமூர்த்தி, வெங்கடேசன், அன்பழகன், அன்புநிதி, கோவிந்தசாமி, கமல்பாஷா, சிவக்குமார், அமலோர் ஆசிரியர், பாலகிருஷ்ணன், சேகர், பாஸ்கர், மூர்த்தி, பாலு, நாகராஜ், பாண்டியன், அஞ்சாபுலி, அபிமன்னன், வீரமுத்து, அன்பரசன், பரதன், அருள்மணி, கலைமணி, கிருஷ்ணமூர்த்தி, தகவல் தொழில்நுட்ப அணி பிரவீன், லட்சுமணன், ஆனந்த், விநாயகம், மாரிமுத்து, அசார், கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழக அரசை முடக்க வேண்டும்; மீனவ மாணவர்களுக்கான சலுகைகளை வழங்குக:

## புதுச்சேரி அதிமுக அன்பழகன் அதிரடி பேட்டி!



புதுச்சேரி: ஜன.21–

தமிழக சட்டமன்றத்தில் ஆளுநரை முதலமைச்சர் அவமதித்ததாகக் குற்றம் சாட்டியுள்ள புதுச்சேரி மாநில அதிமுக செயலாளர் அன்பழகன், தமிழக அரசை உடனடியாக முடக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களைச் சந்தித்த அன்பழகன் கூறியதாவது:

“தமிழக சட்டமன்றத்தில் ஆளுநரை முதலமைச்சர் அநாகரிகமான முறையில் அவமதித்தது கண்டனத்திற்குரியது. ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் ஆளுநர் உரை நிகழ்த்த வேண்டும் என்பது அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் சாசன விதி. ஆனால், ஆளுநர் உரையை அனைத்து மாநிலங்களிலும் நீக்குவேன் என முதலமைச்சர் பேசுவது அண்ணல் அம்பேத்கரையும், அவர் இயற்றிய அரசியல் சாசனத்தையும் அவமதிக்கும் செயலாகும். இது திமுகவின் சிறுபிள்ளைத்தனமான அரசியலையே காட்டுகிறது.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, போதை மாநிலமாக மாறி வருகிறது. பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. தனது தோல்விகளை மறைக்க திமுக அரசு போலியான பிம்பத்தை உருவாக்குகிறது. கடந்த 4 ஆண்டுகளாக அரசியலமைப்பு சட்டத்தை கேவலப்படுத்தி வரும் தமிழக அரசை உடனடியாக முடக்க வேண்டும்.”

“புதுச்சேரியில் தனியார் பள்ளிகளில் பயிலும் மீனவ மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சிறப்புச் சலுகைகள் குறித்து அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் அரசு சலுகைகளைப் பெறுவதில் உள்ள தடைகளை நீக்கி, கல்விச் சலுகைகள் தடையின்றி கிடைக்கச் செய்ய வேண்டும்.

அதேபோல், பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தில் மானியம் வேண்டி 2000க்கும் மேற்பட்ட ஏழைகள் காத்திருக்கின்றனர். அவர்களுக்கு உடனடியாக நிதி ஒதுக்க வேண்டும்.”

“தேர்தல் அறிவிப்பு வர இன்னும் ஒரு மாத காலமே உள்ள நிலையில், பல்வேறு துறைகளில் செலவிடப்படாமல் உள்ள நிதியை மக்கள் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்த உடனடியாக இந்த மாதமே சட்டமன்றத்தைக் கூட்ட வேண்டும். இதற்காக முதலமைச்சரும், துணைநிலை ஆளுநரும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

இவ்வாறு அவர் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

# புதுச்சேரி: மீண்டும் வேலை வழங்கக்கோரி முற்றுகைப் போராட்டம் ; நூற்றுக்கணக்கான ஊழியர்கள் கைது!




புதுச்சேரி: ஜன.21–

புதுச்சேரி பொதுப்பணித்துறையில் பணிநீக்கம்செய்யப்பட்ட ஊழியர்கள் இன்று நடத்திய சட்டமன்ற முற்றுகைப் போராட்டத்தின் போது, காவல் துறையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த பொதுப் பணித்துறை முன்னாள் ஊழியர்கள், (ஜனவரி 20) காலை அண்ணா சிலை அருகே ஒன்று கூடினர். கடந்த 2023 25 பட்ஜெட்டில் அறிவித்தபடி, தங்களுக்கு மீண்டும் வேலை வழங்க வேண்டும் மற்றும் ரூ. 10,500 மாத சம்பளம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் பேரணியாகச் செல்ல முயன்றனர்.

அரசு தங்களை ஏமாற்றிவிட்டதாகக் கூறி, போராட்டக்காரர்கள் அனைவரும் காதில் பூ வைத்துக்கொண்டு நூதன முறையில் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர். சட்டசபையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என அவர்கள் முழக்கமிட்டனர்.

காவல்துறை நடவடிக்கை:

போராட்டக்காரர்கள் தடையை மீறி சட்டமன்றத்தை முற்றுகையிட முயன்றதால், அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவல் துறையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். இதனால் இருதரப்புக்கும் இடையே சிறிது நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது.

தொடர்ந்து போராட்டத்தைக் கைவிட மறுத்த நூற்றுக்கணக்கான ஊழியர்களைக் காவல்துறையினர் கைது செய்து, அங்குள்ள தனியார் திருமண மண்டபங்களில் தங்க வைத்தனர். இந்தப் போராட்டத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# முட்டத்தூர் ஒய்க்காப் மேல்நிலைப்பள்ளியில் 2007 2008 ஆண்டில் பயின்ற 12 ஆம் வகுப்பு மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி



விழுப்புரம் ஜன 21

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தாலுக்கா முட்டத்தூரில் அமைந்துள்ள ஒய்க்காப் மேல்நிலைப்பள்ளியில் 2007 2008 ஆம் ஆண்டு கல்வியாண்டில் 12 வகுப்பு பயின்ற மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது .

நிகழ்ச்சியில் முன்னாள் மாணவர்கள் அனைவரும் ஒன்றுகூடி தங்களுக்கு பாடம் கற்பித்த ஆசிரியர்களுக்கு சிறப்பு செய்யும் வகையில் பூங்கொடுத்து கொடுத்தும் ஆசிரியர்கள் காலில் விழுந்து வணங்கியும் வரவேற்பு அளித்தனர். அதனை தொடர்ந்து ஆசிரியர்களுக்கு நினைவு பரிசு வழங்கி சிறப்பித்தனர்.

தொடர்ந்து முன்னாள் பள்ளி மாணவர்கள் சார்பில் பள்ளிக்கு சுமார் 2 இலட்சம் மதிப்பீட்டில் சிசிடிவி கண்காணிப்பு கேமரா, கழிவறை புதுப்பித்தல் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள் மேலும் முன்னாள் மாணவர்கள் அனைவரும் குழு புகைப்படம் எடுத்து மகிழ்ந்து தங்களது பழைய நினைவுகளை பகிர்ந்துகொண்டனர்

இந்நிழ்வினை முன்னாள் மாணவர்கள் சரண்யா சுரேஷ் இவான், சந்திரசேகர்,என்னால் மாணவர் தலைவர் விஜயராகவன், அன்பரசன்,ஐயப்பன் உள்ளிட்டோர் ஒருங்கிணைப்பு செய்தனர் இதில் ஆசிரியர்கள் முன்னாள் மாணவர்கள் என ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# தேசிய அளவிலான குவாண்கிடோ போட்டியில் 3 தங்கம் உட்பட 8 பதக்கங்கள் வென்று தி கோல்டன் ஸ்டார்ஸ் அகாடமி மாணவர்கள் அசத்தல்

## ருமேனியா நாட்டில் நடைபெற உள்ள சர்வதேச போட்டிக்கு கோவை மாணவி தேர்வு!!



கோவை: ஜனவரி21

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பத்வாத்தி நகரில் ஏழாவது தேசிய அளவிலான குவான்கிடோ போட்டி கடந்த 16 மற்றும் 17 ந்தேதி நடைபெற்றது,

இந்தியாவிலிருந்து 20க்கும் மேற்பட்ட மாநிலங்கள் கலந்து கொண்ட இந்த போட்டியில் தமிழ்நாடு அணி சார்பாக கோவை தி கோல்டன் ஸ்டார்ஸ் அகாடமியில் பயிற்சி பெறும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்...

இதில் ஃபைட்டிங் ,குவான்,வெப்பன்ஸ் ஆகிய மூன்று பிரிவுகளில் கோவையை சேர்ந்த ஒரு மாணவி உட்பட மூன்று பேர் 3 தங்கம் 2 வெள்ளி 3 வெண்கலம் என எட்டு பதக்கங்களை வென்று அசத்தினர்..

இந்நிலையில் வெற்றி பதக்கங்களுடன் கோவை திரும்பிய தி கோல்டன் ஸ்டார்ஸ் அகாடமி நிறுவனர் மற்றும் தலைமை பயிற்சியாளர் சதீஷ் மற்றும் மாணவர்களுக்கு குவாண்கிடோ கோவை மாவட்ட சங்க நிர்வாகிகள் மற்றும் பெற்றோர்கள் கோவை விமான நிலையத்தில் மாலை அணிவித்து உற்சாகமாக வரவேற்றனர்...

தேசிய அளவில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பிடித்த மாணவி,ஐரோப்பா ருமேனியா நாட்டில் நடைபெற உள்ள சர்வதேச போட்டிக்கு தேர்வாகி உள்ளது குறிப்பிடதக்கது..

# ஈரோடு ஆட்டோ ஓட்டுநர்களுக்கு அடையாள அட்டை



ஈரோடு ரயில் நிலையம் ஆட்டோ ஸ்டாண்ட், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு புதிய அடையாள அட்டை வழங்கப்பட்டது. சங்கத் தலைவர் பிள்ளையார் என்கின்ற முத்துசாமி அனைத்து உறுப்பினர்களுக்கும் புதிய அடையாள அட்டையை வழங்கி பாராட்டினார்.

# சேலத்தில் தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு மாவட்ட ஆட்சியர் கல்வி உதவித்தொகை வழங்கினார்.

சேலம். ஜன.21–

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில், தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகைக்கான காசோலையை ஆட்சியர் ரா.பிருந்தாதேவி வழங்கினார்.

பின்னர் ஆட்சியர் தெரிவித்ததாவது:

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வுகாண அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை அளித்த மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின்மீது உரிய தீர்வு அளிக்கப்படுவதை அலுவலர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

அதனடிப்படையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல், ஜாதிச்சான்று, கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 326 மனுக்கள் வரப்பெற்றன.

தொடர்ந்து, தாட்கோ மூலம் தூய்மைப் பணியாளர்கள் நலவாரியத்தின் கீழ் உறுப்பினர்களாக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகள் 10, பிளஸ் 1 வகுப்பு பயில்வோருக்கு தலா ரூ. 1,000, பிளஸ் 2 பயில்வோருக்கு தலா ரூ. 1,500 என 8 மாணவர்களுக்கு ரூ. 9,000க்கான கல்வி உதவித்தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது.

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து 10 மனுக்கள் பெறப்பட்டதாக கூறினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ரவிக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சின்னுசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் என்.ஜெயக்குமார், தாட்கோ மாவட்ட மேலாளர் சு.சக்திவேல், திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலன்) சுகந்தி பரிமளம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி உள்ளிட்ட அரசுத் துறை முதன்மை அலுவலர்கள் பங்கேற்றனர்.

# திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சி புதிய தலைவராக கோபால்சாமி நியமனம்!!!



திருப்பூர், ஜன.21

சட்டசபை தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் காங்கிரஸ் கட்சியில் பல்வேறு அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி தற்போது தமிழக முழுவதும் தலைவர்கள் மாற்றப்பட்டு புதிய தலைவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருப்பூர் மாநகர மாவட்ட தலைவராக இருந்த R.கிருஷ்ணன் மாற்றப்பட்டு புதிய தலைவராக நல்லூர் முன்னாள் நகர மன்ற தலைவர் கோபால்சாமி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 35 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சியில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார்.

நகர செயலாளராகவும், ஐ.என்.டி.யு.சி மாவட்ட பொருளாளராகவும் அடிப்படை உறுப்பினராக இருந்த இவர் இளைஞர் காங்கிரஸ் நல்லூர் பகுதி தலைவராகவும், நல்லூர் இருந்துள்ளார். அதேபோல் 2021 முதல் 2026 வரை நல்லூர் பேரூராட்சி கவுன்சிலராகவும் திருப்பூர் மாநகர் மாவட்ட துணை தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

தற்போது மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள தலைவர் அனைத்து கட்சி நிர்வாகிகளுக்கும் மாநகர மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பு அமைப்பு நிர்வாகிகளுக்கும் நன்றியினை அனைவருக்கும் தெரிவித்து வருகின்றனர்.

இதேபோல் திருப்பூர் வடக்கு மாவட்ட பல்லடம் பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் என்பவரும்.

தெற்கு மாவட்ட தலைவராக கிட்டுசாமி என்பவரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# எழில் கிராமத்தில் கிரிக்கெட் போட்டி மாவட்ட வழக்கறிஞர் அணி பொருளாளர் அருண் தத்தன்,பரிசுகளை வழங்கினார்.



விழுப்புரம், ஜன. 21–

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டம் எய்யில் கிராமத்தில் அம்பேத்கர் கிரிக்கெட் கிளப் மற்றும் மேல்மலையனூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழ்மொழி ராஜதத்தன், முதலாம் நினைவு கோப்பை பழகும் கிரிக்கெட் எழில் கிராமத்தில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அஇஅதிமுக மாவட்ட வழக்கறிஞர் அணி பொருளாளர் இரா .அருண்தத்தன், கலந்துகொண்டு வெற்றி பெற்ற போட்டியாளர் களுக்கு முதல் பரிசினை தச்சாம்பாடி கிரிக்கெட் அணியினருக்கும், இரண்டாவது பரிசினை எய்யில் கிரிக்கெட் அணியினருக்கும், மூன்றாவது பரிசினை மேல்மலையனூர் கிரிக்கெட் அணியினருக்கும்,

நான்காவது பரிசினை வேலந்தாங்கல் கிரிக்கெட் அணியினருக்கும் வழங்கினார். இதில் எய்யில் ஒன்றிய குழு உறுப்பினர் செந்தாமரை கெம்பீரம், பெருவளூர் வழக்கறிஞர் லோகநாதன், எய்யில் சங்கர், வழக்கறிஞர் விஜயகுமார் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்,

கடந்த 14 தேதி முதல் நடைபெற்று கிரிக்கெட் போட்டியில் 35 க்கு மேற்பட்ட கிரிக்கெட் அணியின் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது,

# பூட்டை கிராமத்தில் திறக்கப்படுமா அங்கன்வாடி கட்டிடம்?



சங்கராபுரம் ஜன 21

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட பூட்டை ஊராட்சி ஆதிதிராவிடர் பகுதியில் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி கட்டிடம் பணிகள் நிறைவடைந்து பல மாதங்கள் கடந்தும் இதுவரை திறக்கப்படாமல் காட்சி பொருளாகவே உள்ளது.

கட்டிடம் பயன்பாட்டுக்கு வராததால், அப்பகுதி சிறுவர், சிறுமிகள் இன்னும் வாடகை வீட்டில் கல்வி பயில வேண்டிய அவல நிலை தொடர்கிறது. அடிப்படை வசதிகள் இல்லாத இடத்தில் குழந்தைகள் கல்வி கற்பது பாதுகாப்பு மற்றும் சுகாதார சிக்கல்களை ஏற்படுத்துவதாக பெற்றோர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

பொது நிதியில் கட்டப்பட்ட கட்டிடம் பயன்பாடின்றி கிடப்பது அரசின் அலட்சியத்தை காட்டுவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி கட்டிடத்தை உடனடியாக திறந்து, குழந்தைகள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என ஊர் பொதுமக்கள், பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சேலம் 15 வருஷ அதிமுக கோட்டையில் திமுக நிறுத்தும் வேட்பாளர் யார்?

சேலம். ஜன.21

சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்றத் தொகுதிகளில் ஒன்று சங்ககிரி.கொங்கு வேளாளர் சமூகத்தினர் கணிசமாக வசிக்கும் தொகுதி.

எனவே தேர்தல் வெற்றியை தீர்மானிக்கும் இடத்தில் முக்கிய பங்காற்றி வருகின்றனர். இங்கு கடந்த 1957 ஆம் ஆண்டு முதல் தேர்தல் நடைபெற்று வருகிறது. திமுக, அதிமுக கட்சிகள் அதிக முறை வெற்றி பெற்றுள்ளன. குறிப்பாக அதிமுக 8 முறை வெற்றி பெற்று தனது கோட்டையாக மாற்றி வைத்திருக்கிறது.

சங்ககிரி தொகுதி தேர்தல் வரலாறு

கடந்த 2011, 2016, 2021 ஆகிய தேர்தல்களில் அதிமுக சார்பில் போட்டியிட்டு பி.விஜயலட்சுமி, எஸ்.ராஜா, எஸ்.சவுந்திரராஜன் ஆகியோர் எம்.எல்.ஏக்களாக வெற்றி பெற்றனர். கடைசியாக நடந்த தேர்தலில் அதிமுக, திமுக வேட்பாளர்களுக்கு இடையிலான வாக்கு வித்தியாசம் 20,045. இந்த தேர்தலில் நாம் தமிழர் கட்சி, மக்கள் நீதி மய்யம், அமமுக ஆகியவை வாக்குகளை பிரிப்பதில் முக்கிய பங்கு வகித்தன. 2026 சட்டமன்றத் தேர்தலில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் புதிதாக களமிறங்குவதால் வாக்கு வங்கி கணக்குகள் மாறும் எனக் கூறப்படுகிறது.

எடப்பாடி பழனிசாமியின் கோட்டை

தற்போதைய சூழலில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றிக் கழகம் என நான்கு முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது. சங்ககிரி மாவட்டம் சேலம் மாவட்டத்தில் இடம்பெற்றிருப்பதால் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியின் கோட்டையாக பார்க்கப்படுகிறது. எனவே வரவிருக்கும் தேர்தலில் தனது செல்வாக்கை நிரூபிக்கும் வகையில் பல்வேறு வியூகங்கள் வகுத்து செயல்படுவார் எனக் கூறுகின்றனர்.

அதிமுகவில் யாருக்கு சீட்?

குறிப்பாக எடப்பாடி பழனிசாமியின் உறவினர் வட்டத்திலேயே சிலர் சீட் கேட்டு காய் நகர்த்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுதவிர சிட்டிங் எம்.எல்.ஏ செ.சுந்தரராஜன் மீண்டும் சீட் எதிர்பார்க்கிறார். அதிமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாஜக கொங்கு மண்டலத்தில் தங்களின் செல்வாக்கை உயர்த்த தொடர்ந்து தீவிரம் காட்டி வருகிறது. ஏற்கனவே கோவை, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் எம்.எல்.ஏக்களை வைத்திருக்கின்றனர்.

திமுக வெற்றிக்கு புதிய வியூகங்கள்

இந்த லிஸ்டில் சேலத்தையும் சேர்க்க கவனம் செலுத்தி வருகின்றனர். அதற்கு அதிமுக தலைமை உடன்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த பாஜக மூத்த தலைவர் வி.பி.துரைசாமி கொங்கு மண்டலத்தில் எப்படியாவது சீட் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார். தனது தேர்வில் சங்ககிரி தொகுதியை யும் வைத்திருப்பதாக கூறுகின்றனர்.

ஆளும் திமுகவை பொறுத்தவரை கடந்த முறை போட்டியிட்டு தோல்வியை தழுவிய ராஜேஷ் மீண்டும் சீட் கேட்கிறார். மேலும் திமுக எம்.பி செல்வகணபதி தரப்பிலும் தனது ஆதரவாளருக்கு சீட் பெறும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

கவனம் பெறும் தேர்தல் வாக்குறுதி

நாம் தமிழர், தவெக கட்சிகளின் வேட்பாளர்களை பொறுத்தவரை சில ஆயிரம் வாக்குகளை பிரிக்கும் நிலை உண்டாகும் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். தற்போதைய சூழலில் சிட்டிங் எம்.எல்.ஏ மீது தொகுதி மக்களுக்கு சில அதிருப்திகள் இருப்பதாக கூறப்படுகிறது. ஏனெனில் கொடுத்த வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றவில்லையாம். இது தேர்தலில் எதிரொலிக்கக் கூடும். இதுதவிர கடைசி நேர தேர்தல் வாக்குறுதிகளும் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்கின்றனர்.

# கன்னியாகுமரியில் கலை இலக்கியப் பெருமன்றத்தின் முப்பெரும் விழா



நாகர்கோவில்: ஜன.21

கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளிச்சந்தை அருகே காருபாறையில், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் 50 வது ஆண்டு பொன்விழா, பொங்கல் விழா மற்றும் ஜீவா விழா ஆகிய முப்பெரும் விழாக்கள் ஜனவரி 14, 15 ஆகிய தேதிகளில் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

இவ்விழா இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு நிறைவு விழாவாகவும் கொண்டாடப்பட்டது

இந்த விழாவில் சாகித்ய அகாடமி விருது பெற்ற புகழ்பெற்ற எழுத்தாளர் பொன்னீலன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும் பிரபல ஆன்மீகவாதி அய்யாவழி பால பிரஜாபதி அடிகளார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் தோழர் சுபாஷ் சந்திரபோஸ், த.க.இ.பெ. மாநிலச் செயலாளர் தோழர் கங்கா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், ஹமீம் முஸ்தபா, சொக்கலிங்கம், பூதை நாகராஜன், என்.டி. ராஜ்குமார், நாராயண பெருமாள், மருத்துவர் அழகுநீலா, உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் ராமன். முருகன். அருணாச்சலம், மற்றும் அனில் குமார், ஜீவனந்த், கலைவாணன், லதா கலைவாணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சிறப்பு கருத்தரங்கம்: விழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற கருத்தரங்கில் மருத்துவர் அமுதா, நிஷா, செந்தளிர் இந்திரா, ராமன், முருகன் மற்றும் அருணாசலம் ஆகியோர் உரையாற்றினர். சமூக மாற்றத்தில் கலை மற்றும் இலக்கியத்தின் பங்கு குறித்து ஆழமான கருத்துகள் இக்கருத்தரங்கில் முன்வைக்கப்பட்டன.

நூல் வெளியீடு: விழாவின் முக்கிய நிகழ்வாக மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன:

காருபாறை கிளையின் 50 ஆண்டுகால கலைப் பயணத்தைப் பதிவு செய்யும்பொன் ஆவணம் என்ற வரலாற்று நூல்.மற்றும்

முற்போக்கு மேடைகளில் பாடப்பட்ட எழுச்சிமிக்கப் பாடல்களின் தொகுப்பான தெரு பாடல்,உயர் நீதிமன்ற வழக்கறிஞர் எஸ். அருணாச்சலம் அவர்கள் உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் எழுதிய சிறுகதை நூல்.ஏய் சொல்லு சொல்லு!? ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன

மேலும் "வெறுப்பின் இடத்தில் அன்பை விதைத்து தேசம் காப்போம்" என்ற தலைப்பில் மாணவர்களுக்கான பேச்சு, ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன. கிளையின் முன்னோடிகள் கௌரவிக்கப்பட்டனர். நாஞ்சில் நாதம் மற்றும் ஆற்றுப்பாலன் கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் விழாவிற்கு மெருகூட்டின.

மூன்று தலைமுறைகளைக் கடந்து பயணிக்கும் காருபாறை கிளையின் இந்தப் பொன்விழா, அப்பகுதி மக்களின் பேராதரவோடும் தோழர்களின் அர்ப்பணிப்போடும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக நிறைவடைந்தது.

# திருவள்ளூர் மாவட்டத்தில் வரும் 23 ம் தேதி வருவாய் கோட்ட அளவிலான விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம்

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அறிவிப்பு

திருவள்ளூர் ஜன 21 :

திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் வருவாய் கோட்ட அளவில் 23.01.2026 அன்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு திருவள்ளூர், திருத்தணி மற்றும் பொன்னேரி ஆகிய வருவாய் கோட்ட அலுவலகங்களில் சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்கள் தலைமையில் நடத்த வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திரு.மு.பிரதாப் இ.ஆ.ப அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

எனவே திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் விவசாயம் தொடர்பாக தங்களுக்கும் தங்கள் பகுதிகளில் ஏற்படும் குறைகளுக்கும் தீர்வு காண அந்தந்த வருவாய் கோட்டாங்களில் நடைபெறும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும் இக்கூட்டத்தில் வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை. வேளாண்மைப் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, கூட்டுறவு துறை, வங்கிகள் துறை, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, மின் வாரியம், வருவாய் துறை, ஊரக வளர்ச்சித் துறை, பொதுப்பணித்துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

வருவாய் கோட்ட அளவில் தீர்க்கப்படாத மனுக்கள் மட்டும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள் விடுத்துள்ளார். கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமாய் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் கேட்டுக் கொண்டுள்ளார்.

# உடல் பருமனை குறைப்பதற்காக யூடியூப் பார்த்து வெண்காரம் வாங்கி சாப்பிட்ட இளம்பெண் உயிரிழப்பு

மதுரை: ஜன.21–

உடல் பருமனை குறைப்பதற்காக யூடியூப் பார்த்து வெண்காரம் வாங்கி சாப்பிட்ட இளம்பெண் உயிரிழந்தார். மதுரையில் கல்லூரியில் முதலாமாண்டு பயின்ற செல்லூர் மீனாம்பாள்புரத்தைச் சேர்ந்த கலையரசி (18) உயிரிழந்தார். நாட்டு மருந்துக் கடையில் வெங்காரம் வாங்கி சாப்பிட்டவுடன் வாந்தி, பேதி ஏற்பட்டு உடல்நிலை பாதிப்படைந்து உயிரிழந்தார்.

# உங்க கனவ சொல்லுங்க திட்டம் ஈரோடு ஆட்சியர் ஆய்வு



ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே உள்ள ராஜன் நகரில், தமிழக அரசின் சிறப்பு திட்டமான உங்க கனவ சொல்லுங்க திட்டத்தின் தன்னார்வலர்கள் மூலம் பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களை, திரும்ப பெறும் பணியினை ஈரோடு ஆட்சியர் ச. கந்தசாமி நேரில் சென்று ஆய்வு செய்தார்.

# மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கிய ஆட்சியர்.



சேலம். ஜன.21–

சேலம் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 487 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகளை ஆட்சியர் ரா.பிருந்தா தேவி வழங் கினார்.

பின்னர் ஆட்சியர் தெரிவித்ததாவது:

'உலகம் உங்கள் கையில்' என்ற திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு முதல்கட்டமாக 5,609 மடிக்கணினிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மாணவ, மாணவிகளுக்கு கணினித் திறனை மேம்படுத்த வன்பொருள் மற்றும் மென்பொருளுடன் கூடிய மடிக்கணினிகள் வழங்குவதன் மூலம் கணினி கல்வியை எளிதாக்கி, ஆராய்ச்சித் துறையில் சாதிக்க துடிக்கும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிக்கவும் முடியும். அதன் ஒருபகுதியாக, சேலம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் 487 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி துணை மேயர் மா.சாரதாதேவி, அரசு தொழிற்பயிற்சி நிலைய துணை இயக்குநர் லீமா ரோஸ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

# வில்லியனூர் செந்தமிழ் நகரில் ரூ. 42 லட்சம் செலவில் தார்ச்சாலை அமைக்கும் பணி

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தொடங்கி வைத்தார் !



புதுச்சேரி, ஜன.21–

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்ற தொகுதி வில்லியனூர் பாண்டியன் நகர் கிளைக்கு உட்பட்ட செந்தமிழ் நகர் பகுதியில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ. 42 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் மேற்கொள்ளப்பட உள்ள பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி நேற்று காலை நடந்தது.

இதில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு, தார்ச்சாலை அமைக்கும் பணியை பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் பிரபாகரன், உதவிப் பொறியாளர் சத்திய நாராயணா மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் திமுக கிளைச் செயலாளர் மிலிட்டரி முருகன், ஏகாம்பரம், பிரபு, செல்வராஜ், சுரேஷ், சிவா, முரளி, தனசேகரன், சுசீந்திரன், உஷா, பாரதி, புஷ்பானந்தம், ஜெகதீசன், திமுக தொகுதி செயலாளர் மணி கண்டன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, செல்வநாதன், அவைத்தலைவர் ஜலால் ஹனீப், வர்த்தகர் அணி அமைப்பாளர் ரமணன், விவசாய அணி அமைப் பாளர் குலசேகரன், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் ஆறுமுகம் என்கிற செல்வநாதன், தொமுச தலைவர் அங்காளன், மாநில துணை அமைப்பாளர்கள் காசிநாதன், சரவணன், ராமதாஸ், கோபி, தொகுதி துணைச் செயலாளர் அரிகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர் அக்பர், எம்.எஸ். முரளி, கிளைச் செயலாளர்கள் ராஜ், சபரிநாதன், தங்கராசு, ரகுராமன், திலகர், கமல்பாஷா, கார்த்திகேயன், பாலு, சத்தியமூர்த்தி, பரதன், பாண்டியன், பால முருகன், கோதண்டம், அபிமன்னன், கோவிந்தராசு, சக்தி, கரிகாலன், நாகமணி, அசார், தினேஷ், அருண், சந்தோஷ், ஸ்ரீதர், முருகன், வேலு, நடராஜன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# வாகன விபத்தை ஏற்படுத்தியவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழப்பு.

திருச்சி. ஜன. 21–

திருச்சி மாவட்டம் மருங்காபுரி வட்டம் வளநாடு காவல் நிலையத்திற்கு உட்பட்ட சொரியம்பட்டி அருகே மதுரை திருச்சி தேசிய நெடுஞ் சாலையில் வளநாடு புதுக்குடியைச் சேர்ந்த செந்தில்(48) மற்றும் அவரது மனைவி பிரியா(39) இருவரும் செவ்வாய்கிழமை காலை சுமார் 10மணி அளவில் தங்களது மின்சார இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது இவர்களுக்கு பின்னால் வந்த நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த வலசுபட்டியைச் சேர்நத அழகர்சாமி மகன் கஸ்தூரிராஜ்(46) இவர்களின் வாகனத்தின் மீது மோதியதில் கஸ்தூரி ராஜ் மூச்சுத்திணறல் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார். இச்சம்பவம் தொடர்பாக வளநாடு காவல்துறையினர் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். செந்தில் மற்றும் அவரது மனைவி பிரியா ஆகியோருக்கு லேசான காயம் ஏற்பட்டு தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# மணப்பாறை அருகே வீட்டின் முன்பு கட்டிலில் தூங்கியவர் கொடூரகொலை. போலீசார் விசாரணை.



திருச்சி, ஜன. 21–

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே உள்ள காவல்காரன் பட்டியை சேர்ந்தவர் சிவசுப்பிரமணியன் வயது 55. தனியார் கேஸ் ஏஜென்சியில் வீடுகளுக்கு சிலிண்டர் விநியோகம் செய்யும் டெலிவரி மேனாக பணிபுரிந்து வந்துள்ளார். இவர் நேற்று இரவு வழக்கம்போல் தனது வீட்டின் முன்பு உள்ள தாழ்வார பகுதியில் ஹாஸ்பிடாஸ் கூரையின் கீழ் கட்டிலில் படுத்து தூங்கியுள்ளார். அவரது மனைவி மற்றும் குடும் பத்தினர் வீட்டினுள் தூச்கியுள்ளனர். நேற்று காலை பால் கறப்பதற்காக அவரது மகள் தந்தையை அழைத்துள்ளார். அவரிடமிருந்து பதில் வராததால் அருகே சென்று எழுப்ப முயன்றபோது அவர் தலையில் கொடூரமாக தாக்கப்பட்ட நிலையில் படுகாயத்துடன் ரத்தவெள்ளத்தில் சடலமாக கிடப்பது கண்டு அதிர்ச்சியடைந் தார். இச்சம்பவம் குறித்து புத்தாநத்தம் காவல்துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டது. திருச்சி பயிற்சி எஸ்.பி.,க் கள் பிஷ்வஜிங்பண்டா, விக்னேஷ், மணப்பாறை டி.எஸ்.பி., காவியா மற்றும் புத்தாநத்தம் போலீசார் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர். கைரேகை மற்றும் தடயவியல் துறையினர் வரவழைக்கப்பட்டு தடயங்கள் சேகரிக்கப் பட்டன. மோப்பநாய் நிலாவும் வரவழைக்கப் பட்டு குற்றவாளிகள் குறித்த தடயங்கள் கிடைக்கிறதா என ஆய்வு செய்யப்பட்டது. மோப்ப நாய் வீட்டில் இருந்த சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் ஓடிச்சென்று திரும்பியது. அப்பகுதியில் குற்றவாளியின் தடயங்கள் மற்றும் கொலை செய்ய பயன் படுத்திய ஆயுதங்கள் கிடைக்கிறதா என போலீசார் ஆய்வு செய்தனர்.

இதனையடுத்து சிவசுப்பிரமணியன் உடல் பிரேத பரிசோதனைக்காக மணப்பாறை அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சிவசுப்பிரமணியன் கொலை செய்யப்பட்டது குறித்து தகவலறிந்த அவரது உறவினர்கள் நூற்றுக்கணக்கானோர் கூடியதால் பரபரப்பு ஏற்பட்டது.

# ஈரோடு மாவட்டத்தில் பொங்கல் பரிசுத்தொகுப்பை பெற்ற பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு முக மற்றும் அக மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துள்ளார்கள்




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடைமுறையில் உள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்ப அட்டை தாரர்களுக்கும் பொங்கல் (2026) விழாவை சிறப்பாக கொண்டாட பொங்கல் பரிசுத்தொகுப்பாக ரூ.3,000/ ரொக்கத்துடன் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சக்கரை மற்றும் 1 முழுக்கரும்பு மற்றும் வேட்டி, சேலை வழங்கப்படும் என அறிவித்து வழங்கி யுள்ளார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் செயல்படும் 1,270 நியாயவிலைக் கடைகள் மூலம் பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகிக் கப்பட்டது. இதன்மூலம் ஈரோடு மாவட்டத்தில் 7,45,155 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் 1,373 குடும்பத்தினர் பயன் பெற்றார்கள். இதில் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சக்கரை மற்றும் 1 முழுக்கரும்புடன் ரூ.3000/ரொக்கம், வேட்டி, சேலை அடங்கியுள்ளது.

தமிழர் திருநாளாம் தைத்திருநாளை பொதுமக்கள் மகிழ்ச்சியுடனும், எழிச்சியுடனும் கொண்டாடும் வகையில் பொங்கல் பரிசுத்தொகுப்பாக ரூ.3000/ ரொக்கத்துடன் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சக்கரை, 1 முழுக்கரும்பு மற்றும் வேட்டி, சேலை வழங்கியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்பார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பொங்கல் பரிசுத்தொகுப்பு பெற்ற மாணிக்கம்பாளையம், வீட்டு வசதி குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த திருமதி. ஆலிஸ் நிர்மலா, வயது 52, அவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்ததாவது,

எனது கணவர் கூலி வேலை செய்து வருகிறார். நான் வீட்டையும் குடும்பத்தையும் கவனித்து வருகிறேன். எனக்கு 2 மகன்கள் உள்ளார்கள். எனது கணவரின் வருமானத்தை கொண்டு குடும்பத்தையும் எனது மகன்களையும் படிக்க வைப்பதே பெரும் கஷ்டமாக இருக்கிறது. கூலி வேலையும் எனது கணவருக்கு தொடர்ந்து கிடைப்பதில்லை. இதனால் குடும்பத்தை நடத்துவதே மிகவும் கடினமாக இருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.3,000/ரொக்கத்துடன் அரிசி, சர்க்கரை, வேட்டி, சேலை மற்றும் கரும்பு ஆகிய பொருட்கள் வழங்கப்படும் என அறிவித்தார்கள். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்களிடமிருந்து இந்த பொங்கல் பரிசு தொகுப்பினை பெற்றுக் கொண்டேன். இந்த ரொக்கம் எங்களை போன்ற நடுத்தர மற்றும் ஏழை மக்களுக்கு பெரிய உதவியாக இருந்தது. இந்த ரொக்கப் பணத்தை வைத்து வீட்டுக்கு தேவையான காய்கறி மற்றும் மளிகைப்பொருட்களை வாங்கி இந்த பொங்கலை மிகச்சிறப் புடன் கொண்டாடினோம். பொங்கலை முழு கரும்பு, பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3,000/ ரொக்கம், வேட்டி, சேலை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் குடும்பத்தின் சார்பாகவும், எங்கள் பகுதி பொதுமக்களின் சார்பாகவும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.



பொங்கல் பரிசுத்தொகுப்பு பெற்ற மாணிக்கம்பாளையம் வீட்டு வசதி குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த திருமதி. ராதா, வயது 32, அவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்ததாவது,

நான் கூலி வேலைக்கு சென்று, அதன் மூலம் கிடைக்கும் வருவாயை வைத்து வாழ்ந்து வருகிறேன். எனக்கு அம்மா அப்பா இருவரும் இல்லை. எனக்கு 1 மகள் மற்றும் 1 மகன் உள்ளார்கள். இந்த பொங்கலை கொண்டாட கையில் பணம் இல்லை என்று மனம் வருந்தி கொண்டிருந்த நிலையில் பொங்கல் தொகுப்புடன் ரொக்கம் ரூ.3,000/ வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிந்திருந்தார். இந்த தொகுப்பினை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் பெற்றுக்கொண்டேன். அரிசி, சர்க்கரை மற்றும் கரும்பு ஆகியவை தரமானதாகவும், சுத்தமானதாகவும் இருந்தது. எவரையும் எதிர்பாராமல் மகிழ்ச்சியோடு நானும் என் குழந்தைகளுடன் தைத்திரு நாளை சிறப்பாக கொண்டாடிட தாய் வீட்டு சீதனமாக இந்த பொங்கலை தொகுப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது குடும்பத்தின் சார்பாக மகிழ்ச்சியுடன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு மாவட்டம்.

# திருவள்ளூர் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் 6 தொகுதி ஒருங்கிணைப்பாளர்களுக்கு ரூ. 3.36 லட்சம் மதிப்பில் மடிக்கணினிகள் : மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் வழங்கினார்



திருவள்ளூர் ஜன 21 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள், தங்களது குறைகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் பொது பிரச்சனைகள் தொடர் பாக உதவிகள் வேண்டி யும் 333 மனுக்களை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினர். இதில், நிலம் சம்பந்தமாக 99 மனுக் களும் சமூக பாதுகாப்பு திட்டம் தொடர்பாக 70 மனுக்களும் வேலை வாய்ப்பு வேண்டி 51 மனுக்களும் பசுமை வீடு, அடிப்படை வசதிகள் வேண்டி 78 மனுக்களும் மற்றும் இதர துறைகள் சார்பாக 35 மனுக்களும் என மொத்தம் 333 மனுக்கள் பெறப்பட்டன. இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் அறிவுறுத் தினார்.

இதனைத்தொடர்ந்து, மாற்றுத் திறனாளிகளுக் கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் மாற்றுத்திற னாளிகளிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டு, TNRIGHTS திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வரும் 6 தொகுதி ஒருங்கிணை ப்பாளர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தில் இருந்து முதற்கட்டமாக தலா ரூ.56,000 வீதம், ரூ.3,36,000 மதிப்பிலான மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், தனித்துணை ஆட்சியர் பாலமுருகன், உதவி ஆணையர் (கலால்) கணேசன், துணை ஆட்சியர் (பயிற்சி) செ.சண்முகபிரீத்தா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கூடுதல்)நிர்மலா, மாவட்ட வழங்கல் அலுவலர் வெங்கடேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் உஷா ராணி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**CHANGE NAME**

I, **N. THANABAL**, S/o Thiru Nagaraj, born on 18th October 1982 at Erode, presently residing at No. 48, N.M.S. Marakkadai Lane, Kamarajar Road, Tiruppur – 641604, do hereby declare that I have changed my name and shall henceforth be known as **N. THANAPAL**. Henceforth, I request all concerned to address and identify me by my new name **N. THANAPAL** for all purposes.

**- N THANABAL**

# குழந்தை திருமண தடைச் சட்டம் விழிப்புணர்வு



வந்தவாசி, ஜன 21:

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், அரும்பருத்தி ஊராட்சி மன்றத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கு குழந்தை திருமண தடுப்புச் சட்டத்தின் விழிப்புணர்வு முகாம் செய்யாறு வட்ட சட்டப் பணிக் குழு சார்பில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு ஊராட்சி செயலாளர் கண்ணன், பணிதள பொறுப்பாளர் சரண்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த விழிப்புணர்வு முகாமை வட்ட சட்ட துணை தன்னார்வலர்கள் மலர் சாதிக் மற்றும் டாக்டர் இரா. பாஸ்கரன் ஏற்பாடு செய்து கருத்துரை வழங்கினர்.

Published by **K.SABIULLA**, printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street, Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross, Rajevnagar, manaparai trichy(dis) editor: **K.SABIULLA**, cell.78100-68421